போய்க் கொண்டிருந்த நிலைமையை மாற்றி, 10 மணி நேரத்திலே செல்கிறது. அதை 9 மணி நேரமாக ஆக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சென்னையிலே இருந்து திருச்சி செல்வதற்கு 6½ மணி நேரம் ஆகிறது. ஆகையினாலே மதுரைக்கு 9½ மணி நேரம் ஆக்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளும்.

அரசுப்போக்குவரத்துத்துறை பணி மனைகளில் சோதனைக் கூடங்கள்.

* 340. வினா—திரு எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

அரசுப் போக்குவரத்துத்துறை பணிமனைகளில் "ஓட்டுனர்" டெஸ்டிங் கிளினிக்குகளை அரசு ஏற்படுத்துயுள்ளதா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இல்லை.

THIRU M. A. LATHEEF : In view of the large scale accidents that are reported now, is it not essential that such testing clinics are provided in the Government workshops, so that the drivers may be properly examined and such recurring accidents may be prevented ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The Government is already seized of this matter and we would like to have a separate training institution for the drivers wherein the drivers can not only be trained, but also tested with a vision test, a reaction time test and medical test to enable them to minimise the number of accidents.

திரு எம். தேவராசன் : தலைவர் அவர்களே, பஸ்களிலே அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க ஜப்பான் நாட்டிலே டிரைவர் சீட்டுக்கு முன்னால் அவர்களுடைய குடும்பத்தாருடைய படத்தை வைத்திருக்கிறார்கள். அந்த முறையை நாமும் கையாண்டால் அவர்களுடைய மனைவி மக்களின் படத்தைப் பார்க்கிறபோது நல்ல முறையிலே விபத்துக்கள் இல்லாமல் ஓட்டுவதற்கு வசதியாக இருக்கும் அல்லவா? அந்த முறையைக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஜப்பான் நாட்டிலே டிரைவர்கள் எல்லாம் தொழில் நுட்ப வல்லுநர்களாக எஞ்சினியர்களாக இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலே எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும் என்ற தகுதியை வைத்திருக்கிறோம். ஆகவே டிரைவர்களுக்கு நல்ல முறையிலே பயிற்சி அளித்து விபத்துக்களைத் தடுக்க முடியும் என்று கருதுகிறேன். குடும்பத்தாருடைய படத்தை

முன்னாலே மாட்டினால் விபத்துக்கள் குறையுமா அல்லது அதிகமாகுமா என்பது அவரவர்களுடைய குடும்பத்தினுடைய நிலையைப் பொறுத்துத் தான் அமையும்.

திரு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, குடும்பத்தாருடைய போட்டோக்களை வைத்தால் விபத்துக்கள் குறையும் என்று சொன்னார்கள். குடும்பம் இல்லாதவர்கள் யாருடைய போட்டோவை வைத்துக் கொள்ளுவது என்பதை அறிய விரும்புகிறேன். முற்பகல் 10-00

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அவரவர் களுக்குப் பிடித்தமான போட்டோக்களை வைத்துக் கொள்ளலாம்.

திரு கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, தண்ணீரில் செலுத்து கின்ற பஸ் இருப்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? ஹூவர்கூப்பர் என்ற தண்ணீரில் செலுத்துகின்ற பஸ் வெளிநாடுகளில் இருக்கின்றது. அந்த மாதிரி பஸ்களை கிழக்குக் கடற்கரையில் விட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : முதலில் தரையில் ஓடுகின்ற பஸ்களைப் பற்றிக் கவனிப்போம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

திரு தொ. பா. சீனிவாசன் : தலைவர் அவர்களே, அடிக்கடி விபத் துக்கள் குடிப்பழக்கம் உள்ள டிரைவர்கள் இருப்பதால் ஏற் படுகிறது என்று சொல்லப்படுகின்றது. ஆகவே குடிப்பழக்கம் உள்ள டிரைவர்களுக்கு லைசென்சுகளை ரத்து செய்ய அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விபத் துக்களைப் பொறுத்தவரையில், டிரைவர்களின் குடிப்பழக்கத்தால் மட்டும் ஏற்படுகின்றது என்று கொள்ளுவது சரியானதல்ல. சாலைகளின் விதி களை சரியாகப் பின்பற்றாத காரணத்தாலும், அதே போன்று பல்வேறு வகையான வண்டிகள் நம்முடைய சாலைகளில் செல்லுகின்ற காரணத் தாலும், அதுமட்டுமல்லாமல் டிரைவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் நீண்டநேரம் வேலை செய்யவேண்டிய சூழ்நிலை இருப்பதாலும் விபத்துக் கள் ஏற்படுகின்றன. ஆகவே டிரைவர்களின் குடிப் பழக்கத்தால் மட்டும் ஏற்படுகிறது என்ற கருத்து சரியானதல்ல. இருந்தாலும் டில்லி யில் நடைபெற்ற அனைத்திந்திய போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில் பிரத்திலைசர் (Breathyliser) என்ற கருவி மூலம் குடிப்பழக்கத்தில் இருக்கும் டிரைவர்களைக் கண்டுபிடிக்க முடியும் என்றும், அந்தக் கருவியை நம் நாட்டிலேயே செய்ய முடியும் என்றும், அதைப் பயன்படுத்தி டிரை வர்களைக் கட்டுப்படுத்த முடியுமென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.